*385 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதி லளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்காவில் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க வேண்டு மென்று கோரி எத்தனை கிராமங்களிலிருந்து விண்ணப்பங்கள் வந்து இருக்கின்றன ?

(இ) அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) and (இ) தாண்டவராயன் சோழகப்பேட்டை கிராமத்திலிருந்து ஒன்றும், வயலானூர் கிராமத்திலிருந்து ஒன்றும் ஆக இரண்டு முறையீடுகள் வந்தன.

(2). தாண்டவராயன் சோழகப்பேட்டை கிராமத்திற்கு மட்டும் நாணயச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டால் அது திறம்படச் செயல்படுவது அரிது. எனவே மனுக்கொடுத்தவர்கள் அவர்களுடைய கிராமத்திற்கு அண்மையில் உள்ள கணக்கர்பட்டு பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப் பினர்களாகச் சேருமாறு அவர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டது.

வயலானூர் கிராமத்திலிருந்து வந்த முறையீட்டைப் பொறுத்தவரை யில் வயலானூர் முத்தாலம்மன் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் நாணயச் சங்கமொன்று அக்கிராமத்தில் ஏற்கெனவே இருப் பதாகத் தெரியவந்துள்ளது. இச்சங்கம் பல்லாண்டுகளாகச் செய லற்றிருந்ததாலும், அச்சங்கத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு வாய்ப்புகள் ஏதும் இல்லையாதலாலும் அச்சங்கத்தைக் கலைப்பதற்காக அரசாங்கக் கலைப்பு அதிகாரி (Official Liquidator) ஒருவர் நியமிக்கப்பட் டுள்ளார். இந்த வயலானூர் கிராமம் அண்மையிலுள்ள பூவாலை பல நோக்கக்கூட்டுறவுச் சங்கத்தின் செயல் எல்லைக்குள் இப்போது சேர்க் கப்பட்டுள்ளது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க சர்க்காரின் அடிப்படைத் திட்டங்கள் என்ன ? ஹரிஜனங்களுக்குத் தனிச் சலுகை அளிக்க இந்தச் சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படு கிறபோது லையபிள் யூனியனாக இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட் டிருக்கிற அங்கத்தினர்கள் அத்தனைபேரும் சேர்ந்திருந்தால்— அது செயல் படப்போதுமா என்று பார்த்து முடிவு செய்யப்படுகிறது. ஹரிஜனங் களுக்கு எந்த முறையில் அமைக்க வேண்டும் என்பதை எழுதி அனுப் பினால் பரிசீலிக்கப்படும்.

நவீன அரிசி அரைவை ஆலை, திருவாரூர்

*386 வினா.—திரு. ஏ. அ. சுப்பராஜா : மதிப்பிற்குரிய சட்ட- கூட்டுறவு அமைச்சர் தய்வுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருவாரூர் நவீன அரிசி ஆலை எப்பொழுது துவக்கப்பட்டது ?

(இ) இதுவரையில் எத்தனை டன்கள் அரிசி அரைவை நடத்தி யிருக்கிறது ?

(உ) ஒரு டன் அரிசி அரைவை செய்ய இவ்வாலையில் எவ்வளவு செலவு ஆகிறது ?

(எ) தனியார் மில்லில் அரைவை செய்ய ஒரு டன்னுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தொகையென்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் தேதியன்று திருவாரூர் நவீன அரிசி ஆலை துவக்கப்பட்டது.

(இ) 1967-ம் ஆண்டு மார்ச் முடிவுவரை 16,275 (பதினாறு ஆயிரத்து இருநூற்று எழுபத்தைந்து) டன் நெல் அரைக்கப்பட்டது.

1967 ஜுலை 17]

(உ) ஒரு டன் நெல்லை இவ்வரிசி ஆலையில் அரைக்க ரூ. 10·03 செலவாகிறது.

(எ) தனியார் அரிசி ஆலையில் ஒரு டன் நெல் அரைக்க விதித்துள்ள கட்டணம் ரூ. 10·20 ஆகும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : அரசாங்கம் நடத்துகிற நவீன ஆலையிலே நல்ல ரக நெல்லை அரைவைக்குக் கொடுத்ததிலே 70,72 சதவீதம் வரை அவுட்டர்ன் கிடைக்கிறது. ஆனால் அதே நேரத்திலே அதே நெல்லை தனியார் துறையிலே அரைப்பதற்கு ஒப்பந்தம் செய்கிறபொழுது 65 சத வீதம்தான் ஒப்பந்தம் செய்துகொள்ளப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். இந்த வித்தியாசத்தால் நமக்குக் கிடைக்கின்ற லாபம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அளவில் இருக்கிறது. ஆகவே, இதைத் தடை செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடுகள் செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த நவீன ஆலை ஏற்படுத்தியதே அதற்காகத்தான். திருவாரூரிலே நவீன ஆலையை அந்த முறையில் தான் ஏற்படுத்தி இருக்கிறோம். தனியார் துறையில் ஒப்பந்தம் செய்வதைப் பொறுத்த வரையில் தவறு இருந்தால், அது பரிசீலிக்கப்படும்.

திரு. நா. காசிராமன் : திருவாரூரில் உள்ள நவீன ஆலையில் ஒரு நாளைக்கு எவ்வளவு டன் அரைக்க முடியும், ஒரு வருடத்திற்கு எவ்வளவு டன் அரைக்க முடியும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு வருடத்திற்கு 28,800 டன் நெல் அரைக்கலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இதை ஃபேஸ்ட் புரோகிராமிலே ஆரம்பித்திருக்கிறார்கள். இதுவரை 38 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு தொடங்கப்பட்டிருக்கிறது. இதனுடைய முழுப் பலனையும் பின்னால்தான் சொல்ல முடியும்.

நகராட்சிக்குக் குடிநீர்த் திட்டம்

* 387 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகர மன்றத்திடமிருந்து, குடி நீர்த்திட்டம் மேலும் விஸ்தரிக்க எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு அதற்காக உதவி மானியம் கேட்டு அரசாங்கத்திற்குக் கோரிக்கைகள் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) and (இ) சிதம்பரம் நகராட்சிக்கான குடிநீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டத்தின் முதல் கட்ட வரைவு மதிப்பீடுகள் தலைமைப் பொறியாளரிடமிருந்து வந்துள்ளன. இதன் முதலீட்டுச் செலவு ஏறத்தாழ ரூ. 3·24 லட்சம் ஆகும். இத்திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்து, அதைச் செயல் படுத்துவதற்கு ரூ. 2·24 லட்சம் கடனுதவி அளித்தல் வேண்டும் எனக் கோரும், சிதம்பரம் நகராட்சி மன்றத் தீர்மானம் ஒன்று 14—6—1967 அன்று வந்துள்ளது. இத்திட்டத்தை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சார், சிதம்பரம் ஒரு பெரிய நகரம். ஜனப் பெருக்கம் அதிகமாகியிருக்கிறபடியால், இப்பொழுது இருக்கிற குடிநீர்த் திட்டம் போதாது. ஆகையால் நம்முடைய அரசானது உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் குறிப்பிட்ட காரணமாகத்தான் அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.